# இருபத்தோராம் நூற்றாண்டு யாழ்ப்பாண இந்து சமய வளர்ச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு

Subaraj, N.1, Rajkumar, U.2

[1,2] *Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.*

aarani525@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித குலத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புகளின் போக்கில் ஊடகங்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. ஊடகங்கள் சமூகத்தில் பாரிய மாற்றங்களை செய்யக்கூடிய சக்தி படைத்தவை. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் மதப்பிரசாரங்களை செய்ததில் இந்த ஊடகங்களுக்கு முக்கிய பங்குள்ளது. இன்றைய காலகட்டத்தில் ஊடகங்கள் மக்களின் வாழ்வோடு ஒன்றித்து அவர்களது பல தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. அந்தவகையில் இந்துக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் ஊடகங்கள் கணிசமான பங்களிப்பினை செய்கின்றது. இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டம் இந்துப் பண்பாடு முதன்மை பெற்று விளங்கும் இடங்களுள் ஒன்றாகும். இந்துக் கலாசாரத்தில் ஊறித் திழைத்த சமுதாய கட்டமைப்பு இங்கு காணப்படுகின்றது. இருப்பினும் நவீன கால பண்பாட்டு மாற்றம் இங்குள்ள இந்துசமயப் பாரம்பரியத்தை சீர்குழைப்பதில் பங்கு வகிக்கும் முக்கிய காரணியாகும். இதில் அதிகம் பாதிக்கப்படுவது இளைஞர் சமுதாயமாகும். இந்துக்களின் சிறப்புமிகு மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் விழுமியங்களையும் அலட்சியப்படுத்தி காலப்போக்கில் அவற்றை மறந்து போகின்றனர். எனவே இந்துப் பண்பாட்டின் சிறப்புகள் தொடர்ச்சியாக சமூகத்தில் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையெனில் மாறிக் கொண்டிருக்கும் பண்பாட்டியங்கியலில் இந்துசமயம் தனது தனித்துவத்தை இழக்க நேரிடும். இன்றைய சமுதாயத்தில் இந்துப் பண்பாட்டுச் சிறப்புகளை ஒவ்வொருவரினதும் மனதில் இருத்தும் பணியினைச் செய்ய ஊடகமே பொருத்தமான சாதனமாகும். பொதுவாக ஊடகங்கள் எனும் போது அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் எனும் இரு வகையான ஊடகங்கள் வகைப்படுத்தி ஆராயப்படுகின்றன. ஆய்வின் விரிவஞ்சி அச்சு ஊடகங்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சமய பண்பாட்டு விழுமியங்களை எடுத்துக்காட்டும் அச்சு ஊடகங்களை அடையாளம் காணுதலும், தற்காலத்தில் இந்து சமய பண்பாட்டு நெறிமுறைகளை வளர்ப்பதில் ஊடகங்களின் முக்கியத்துவத்தினை விபரித்தலும் இவ் ஆய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இதற்கு விபரண ஆய்வு, வரலாற்றியல் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் அச்சு ஊடகங்கள் பொதுவாக இந்து சமயத்திற்கு எதிரான ஆயுதங்களாகவே பயன்பட்டன. காலப் போக்கில் இந்துக்களும் ஊடகங்களை தமது சமய, பண்பாட்டு வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொண்டனர். தற்காலச் சூழலில் வணிக நோக்கோடு இந்த ஊடகங்கள் செயற்படுவதால் சமய, பண்பாட்டு வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பு கணிசமானளவு குறைந்துள்ளது. எனினும் யாழ்ப்பாண மக்களின் கலை, பண்பாடு, இந்துக் கல்வி வளர்ச்சி, இந்து சமய வளர்ச்சிக்கான பெண்களின் பங்களிப்பு, இந்து சமயத்திற்குத் தொண்டாற்றிய பெரியார்கள் போன்ற கருத்துக்களை ஊடகங்கள் காத்திரமாக வெளிப்படுத்திக் கொண்டும் வருகின்றன.

**திறவுச் சொற்கள்**: *அச்சு ஊடகங்கள், இந்துசமயம், பத்திரிகை, யாழ்ப்பாணம், பண்பாட்டுப் பாதுகாப்பு*

**ஆய்வு அறிமுகம்**

இலங்கையில் வட மாகாணத்தில் வரலாற்றையும் பண்பாட்டையும் தனித்துவமாய்ப் பேணிப் பாதுகாக்கும் பிரதேசமாக யாழ்ப்பாணப் பிரதேசம் காணப்படுகின்றது. மிக நீண்டகால இந்துசமயம் சார் தனித்துவங்கள் இங்கு பேணிப் பாதுகாக்கப்படுவதோடு மொழி, மதம், சடங்கு, சம்பிரதாயங்கள், இந்து சமயம் சார் விழாக்கள், வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க ஆலயங்கள், போன்றன முக்கியம் பெறுவதனைக் காணலாம். மற்றும் இந்து சமயத்தினை வளம்பெறச் செய்வதற்கும் இந்து மக்களை காலத்திற்குக் காலம் வழிப்படுத்தி நெறிப்படுத்தவும் ஆறுமுகநாவலர் போன்ற இந்துசமயப் பெரியார்கள் பலர் காலத்திற்குக் காலம் தோன்றிய பெருமையினையும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஊடகங்களினுடைய தோற்றமானது 17ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே காணப்படினும் அது கணிசமான அளவினதாகவே காணப்பட்டது. அந்நியர் ஆட்சியானது இக் காலகட்டங்களிலே தலைதூக்கியதன் காரணமாக இந்து சமயத்திற்கும் பிற சமயங்களிற்கும் இடையே போட்டித் தன்மை காணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டளவில் இந்து சமயத்தை நிலைநிறுத்துவதற்கான பணிகள் பெரு விருட்சமாய் துளிர்விடத் தொடங்கியது. அந்தவகையில் இந்து சமயம் சார் இலக்கியங்கள், பத்திரிகைகள் போன்றன சமூக ஊடகங்களாய்த் தோற்றம் பெற்று இந்து சமயத்தை நிலைநிறுத்தி அதனை மக்களிடையே கொண்டு செல்வதற்கு அளப்பரிய பணியாற்றின. மனித நாகரிக வளர்ச்சியில் தகவல்களை விரைவாகப் பகிர்ந்து கொள்வதற்கெனவே ஊடகங்கள் உருவாகின. இரு வேறுபட்ட தரப்பினருக்கிடையே ஒரு தொடர்பாடலை தகவல் பரிமாற்றங்களை ஊடகங்களே செய்கின்றன. ஊடகங்களின் வளர்ச்சியானது மனித பரிணாமத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திவிட்டது என்று கூறுவதே பொருத்தமானதாகும். தனிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த மனித சமுதாயம் இன்று ஊடகங்களின் வளர்ச்சியால் பூகோளமயமாதல் என்ற நிலைக்கு மாறியுள்ளது.

ஊடகம் என்றால் கடத்துவது என்று பொருள்படும் ஒரு செப்புக் கம்பியின் முனையிலிருந்து மறுமுனைக்கு மின்சாரத்தைக் கடத்திச் செல்லும் போது அது அங்கே ஒரு ஊடகமாகச் செயற்படுகின்றது. ஒரு கருத்தை அல்லது தகவலை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவிதான் ஊடகம் எனப்படும். நாம் ஒருவரிடம் பேசும் போது நமது வார்த்தையானது ஒலி வடிவில் காற்றில் பயணம் செய்து மற்றவரைச் சென்றடைகின்றது. இதில் ஒலி என்பது தகவலின் வடிவம். காற்று ஓர் ஊடகமாகச் செயற்படுகின்றது. அதேபோல் நாம் பேசுவதை மற்றவர் புரிந்துகொள்ளும் போது மொழி ஒரு ஊடகமாகச் செயற்படுகின்றது.

ஊடகவியல் என்பது மக்களுக்கிடையில் தகவல்களை, கருத்துக்களை கொண்டுசென்று பரப்புகின்ற வேலையைச் செய்கின்ற துறையைக் குறிக்கின்றது. குறிப்பாகச் சொன்னால் கருத்தியலை கட்டமைப்பதும் சந்தைப் பொருளாதாரத்தின் இருப்பை தீர்மானிப்பதும், அரசியல், தத்துவம், சட்டம், மருத்துவம், சமயம் என பல்துறைகளைத் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் விளங்குகின்றது. முன்பொரு காலத்தில் நாட்டின் தலைவரிடம் உள்ள கருத்துக்களை நாட்டு மக்களிடம் சேர்ப்பதற்குரிய ஊடகங்களாக தபால்கள், பத்திரிகைகள் என்பன தோன்றின. இவ்வாறே ஊடகம் எனும் கருத்தியல் தோற்றம்பெற்றது. நாளடைவில் மனித நாகரிகம் பெரு வளர்ச்சி கண்டதன் காரணமாக பல ஊடகங்கள் இச் சமுதாயத்திலே தோற்றம் பெற்றன.

எனவே தற்காலத்தைப் பொறுத்தவரையில் இந்து சமய வளர்ச்சியிலே ஊடகங்களின் வகிபங்கானது காத்திரமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் ஊடகங்கள் எனும் போது அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்ற பிரிவுகள் பிரதானமாகக் காணப்படுகின்றன. இவை தமக்குரிய பாணியில் பல்வேறு விடயங்களை மக்களிடம் கொண்டுசேர்ப்பது மட்டுமல்லாமல் மக்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல் பொருளாதார பண்பாட்டுப் பரப்புகளின் போக்கில் ஊடகங்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. ஓர் வரலாற்றினையோ அல்லது மக்கள் பண்பாட்டையோ ஆவணப்படுத்த முற்படுகின்ற போது

முதல்நிலைத் தரவு வழங்கிகளாக ஊடகங்கள் காணப்படுகின்றன. படித்தவர் முதல் பாமரர் வரை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் அவை காணப்படுகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

குறித்த ஆய்வு ஒன்றினைத் தெளிவுபடுத்துவதற்கும் ஆய்வு பற்றிய மேலதிக தகவல்களை முன்வைப்பதற்கும் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வு தொடர்பான பரவலான அறிவினைப் பெற்றிருத்தல் அவசியமாகும். இந்த வகையில் மேல்வரும் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் என்பன இந்த ஆய்வுக்கான ஆய்வு இடைவெளியை பெற்றுத் தருவதில் காத்திரமான பங்களிப்புகளை செய்துள்ளன.

சிவகுருநாதன்.இ அவர்கள் ''இலங்கையில் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி'' எனும் நூலில் அச்சு ஊடகங்களிற்கான ஓர் பொதுவான வரைவிலக்கணத்தைக் கூறி ஐரோப்பியர் காலத்தில் ஈழத்தின் அச்சுக்கலையின் வருகை தொடர்பாகவும் கிறிஸ்தவ மற்றும் இந்து சமயம் சார்பாக வெளியிடப்பட்ட பத்திரிகைகளிற்கான ஓர் அறிமுகத்தினையும் குறிப்பிடுகின்றார். முகுந்தன்.ச அவர்கள் ''பத்தொன்பதாம் நுற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத் துறையின் வகிபங்கு'' எனும் ஆய்வுக் கட்டுரையிலே 19ஆம் நூற்றாண்டில் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியில் இந்துப் பத்திரிகைகளின் முக்கியத்துவத்தினை சான்றுகள் காட்டி விளக்குகின்றார்.

சிவனேசச்செல்சன்.ஆ அவர்கள் ''இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்'' எனும் நூலில் 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஈழத்தில் தோற்றம்பெற்ற புதினப் பத்திரிகைகள் மற்றும் சமயப் பத்திரிகைகளினை தகுந்த எடுத்துக்காட்டுக்களோடு குறிப்பிடுகின்றார். புண்ணயமூர்த்தி.கி, அவர்கள் ''இலங்கையில் சைவ சமய மறுமலர்ச்சியில் ஆறுமுக நாவலரின் பங்களிப்பு'' எனும் நூலிலே இலங்கையில் அந்நியர் ஆதிக்கம், நாவலரின் காலச் சூழல், நாவலர் செய்த மறுமலர்ச்சி, மற்றும் அவரின் பணிகள் தொடர்பாக குறிப்பிடுகின்றமை ஈழத்தில் அச்சு ஊடகங்களின் வருகைக்கான தேவையினை அறிய உதவுகின்றது.

யோகராசா.செ, அவர்கள் ''ஈழத்து இலக்கியமும் இதழியலும்'' பத்தொன்பதாம், எனும் நூலில் இருபதாம் நுற்றாண்டுகளில் வெளிவந்த பத்திரிகைகள் தொடர்பாக குறிப்பிட்டு ஈழகேசரிப் பத்திரிகையின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றார். சாமி. அ. ம. அவர்கள் ''19 ஆம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள்'' நூலிலே தமிழ் இதழ்களின் தோற்றம் வளர்ச்சி போன்றவற்றினைக் குறிப்பிட்டு இந்தியவியல் சார் இதழ்கள் தொடர்பான குறிப்புக்களை எடுத்துக்காட்டுகின்றார்.

ஜெயப்பிரகாஸ். சண்முகசர்மா, அவர்கள் ''இந்து சமய நிகழ்ச்சிகளில் ஈழத்து ஊடகத்தின் பங்களிப்பு'' எனும் நூலிலே ஈழத்தில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் அறிமுகம் தொடர்பாகவும் 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் ஒலிபரப்பான இந்து சமயம் சார் நிகழ்ச்சிகளை ஆதாரங்களோடு குறிப்பிடுகின்றார்.

**ஆய்வு முறையியல்**

யாழ்ப்பாண மக்களின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகளை ஆராய தற்காலத்தில் இயங்கு நிலையில் உள் ஊடகங்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாட வேண்டியது அவசியமானதாகும். எனவே ஊடகங்கள் உள்ள இடத்திற்கு நேரடியாகச் சென்று தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை யாவும் இவ்வாய்வின் முதனிலைத் தரவுகளாக (Primary Data) அமையும். ஊடகங்கள் உள்ள இடங்களுக்கு சென்று அவர்களின் குறிப்பிட்ட நிகழ்வுகளில் பங்கு கொள்வதன் மூலமும், அது தொடர்பாக அங்குள்ள செய்தித் தொகுப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் போன்றவர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை கேட்டறிதல், சான்றுகளை

ஆவணப்படுத்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அத்தோடு இவை தொடர்பாக வெளிவந்த இலக்கியத் தரவுகளும் இணைய வழித் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக (Secondary Data) அமையும். இங்கு வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு மற்றும் ஒப்பியல் ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் சமூகத்துடன் இந்த ஊடகங்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் கொண்டு தற்காலத்தில் விளங்குகிறது என பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளது.

**முடிவுகளும் கலந்துரையாடலும்**

**ஊடகம் என்பதன் பொருள் விளக்கம்**

பொதுவாக ஊடகம் என்பது தமிழில் கடத்துவது அல்லது காவுவது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஊடகவியல் என்கின்ற போது அது மனிதர்களுக்கிடையில் கருத்துக்களை தகவல்களை, காவிச் செல்கின்ற, வேலையைச் செய்யும் தொடர்பாடல் சம்மந்தப்பட்ட துறையைக் குறிக்கின்றது என்று சாதாரணமாகச் சொல்லலாம். குறிப்பாகச் சொல்வதானால் கருத்தியலைக் கட்டமைப்பது, மனிதர்களினதும், சமூகத்தினதும் இருப்பைத் தீர்மானிப்பது, சந்தைப் பொருளாதாரத்தின் இருப்பைத் தீர்மானிப்பது, அரசியல், தத்துவம், விஞ்ஞானம், கலை, சமயம், சட்டம், மருத்துவம் எனப் பலதுறை சார்ந்த விடயங்களில் தீர்மானகரமான சக்தியாக விளங்குவதாகும். (சுந்தரம்பிள்ளை, 2009)

**ஊடகங்களின் வகைகள்**

ஊடகங்களை அவை வெளிப்படுத்தும் இயல்புகளின் அடிப்படையில் பின்வருமாறு இரண்டாகப் பிரிக்க முடியும்.

1. அச்சு ஊடகம்
2. இலத்திரனியல் ஊடகம்

**அச்சு ஊடகங்கள்**

அச்சு ஊடகம் எனும் போது அது பிரதானமாக செய்தித்தாளையே குறிக்கிறது. உலகின் முதல் செய்தித்தாள் ஜேர்மனிய நாட்டிலிருந்து கி.பி. 1660 இல் தோன்றியது. அன்றுமுதல் இன்றுவரை மக்களின் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றதொரு சாதனமாக விளங்குகிறது. அச்சுத்துறையின் மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்ப செய்தித்தாளும் அதனது அமைப்பு, செய்திவேகம், பொருளடக்கம் முதலியவற்றில் மாற்றமும் வளர்ச்சியும் கண்டது. அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல் என்ற அடிப்படைகளை கைக்கொண்டு இவை சிறந்த சாதனமாக செயற்பட்டு வருகின்றன. (சுந்தரம்பிள்ளை, 2009)

செய்தித்தாள் உள்ளிட்ட இந்த ஊடகங்களை வெறும் அச்சடித்த தாள்களாக கருதிவிட முடியாது. உலகின் பல நாடுகளில் ஒரே பத்திரிகையின் லட்சக்கணக்கான பிரதிகள் கூட விற்பனையாகின்றன. ஜப்பான் நாட்டிலிருந்து வெளியாகும் தினசரி செய்தித்தாளான “அசாலி சிம்பான்'' எனும் பத்திரிகை ஒரு நாளைக்கு பத்து லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றது. எமது நாட்டை பொறுத்தவரையில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நாளிதழ்கள் மட்டுமன்றி வார, மாத, காலாண்டு செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும், ஆண்டிதழ்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. (சுந்தரம்பிள்ளை, 2009)

**இலத்திரனியல் ஊடகங்கள்**

மின்னியல் சார் கருவிகளையும் நுட்பங்களையும் கொண்டியங்கும் தொடர்பு சாதனங்களை இலத்திரனியல் ஊடகங்கள் என்ற வரையறைக்குள் வைக்கின்றோம். வானொலி, தொலைக்காட்சி என்பவற்றையும் இணையத்தையும் இத்தொடர்பு சாதனங்களில் பிரதானவையாகக் கூறலாம்.

**யாழ்ப்பாணத்தில் ஊடகங்களின் வளர்ச்சி**

ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பல அச்சுக் கூடங்கள் தோற்றம் பெற்றன. அக் காலங்களில் அச்சுக் கூடங்களை நிறுவியவர்களில் பெரும்பாலானோர் புலமையாளர்களாகக் காணப்பட்டனர். மற்றும் அவர்கள் அச்சக உரிமையாளர்களாகவும் விளங்கினர். உதாரணமாக வல்வை வைத்திலிங்கம் பிள்ளை, வதிரி தாமோதரம்பிள்ளை, தும்பளை சுப்பிரமணிய சாஸ்திரிகள் போன்றோரைக் குறிப்பிடலாம். பெருந்தொகைப் பணத்தினை முதலிட்டு பலத்த சிரமங்களின் மத்தியில் நிறுவப்பட்ட அச்சியந்திரத்தின் அசுர பசிக்குத் தீனி போடக்கூய வள்ளண்மையை பத்திரிகைகளும் பெற்றிருந்தன பத்திரிகைகள் தோன்றி வளரும் வாய்ப்புக்களும் காணப்பட்டன. அரசியல், சமூக, சமய பொருளாதார பண்பாட்டு மாற்றங்களை உண்டு சுவைத்தவர்கள் உலகத்தைக் கண்டுகளிக்க பத்திரிகைகள் வழிசமைத்தன.

இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்துப் பத்திரிகைகள் எத்தகைய வகிபங்கைக் கொண்டிருந்தன என்பதை ஆராய முற்படும் போது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய இந்து சமயச் சார்புடைய பத்திரிகைகளாக இலங்கை நேசன் (1877), சைய உதயபானு (1880), சைவசம்போதினி (1881), விஞ்ஞான வர்த்தினி (1882), சைவ அபிமானி (1884) இந்து சாதனம் (1889) ஆகியவற்றை பிரதானமாகக் கூற முடியும். (சிவனேசச் செல்வன், 2010)

இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரசித்தமான பத்திரிகைகள் எனும் வகையில் பல்வேறு பத்திரிகைகள் தோற்றம் பெற்றுள்ளதனைக் காணலாம். அந்த வகையிலே சுதேசநாட்டியம் 1902, விவேகாநந்தன் 1902, ஆத்மபோதினி, சைவ சூக்குமார்த்த போதினி 1908, ஞானசித்தி 1908, குருசந்திரோதயம் 1908, சைவ பாலிய சம்போதினி 1910, திராவிட மித்திரன், மஹாவிஜயலட்சுமி, கலியுகவரதன் 1911, சண்முகநாதன் 1911, விச்சுவகர்மன் 1912, பாலபாஸ்கரன், ஆதிதிராவிடன் 1919, ஆனந்தசாகரம், தேசாபிமானி 1923, தமிழர் போதினி 1925, கலிகாலதீபம் 1927, சோதிட பிரபாலினி 1927, பஞ்சசக்தி 1930, ஈழகேசரி 1930, ஜனதர்ம போதினி 1930, தமிழன் 1930 போன்ற பத்திரிகைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியனவாகக் காணப்படுகின்றன. (சிவனேசச் செல்வன், 2010)

**இருபத்தோராம் நுற்றாண்டு அச்சு ஊடகங்கள்**

இருபத்தோராம் நூற்றாண்டிலே இன்று யாழ்ப்பாணத்து மக்களிடத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற அச்சு ஊடகங்களை பொதுவாக இரண்டு பிரிவினுள் வகைப்படுத்திப் பாரக்கலாம்.

1. செய்திப் பத்திரிகைகள்
2. சமயப் பத்திரிகைகள்

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பல்வேறு ஊடகங்கள் தோற்றம் பெற்றிருந்தாலும் இன்றுவரை அச்சு ஊடகங்களும் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியவண்ணம் தான் உள்ளன. ஒரு பத்திரிகையானது மீள மீள விசிக்கப்படும் போது வெகுசன அபிப்பிராய உருவாக்கத்தில் அவை பிரதான இடம் வகிக்கின்றன.

**செய்திப் பத்திரிகைகள்**

ஈழநாடு

இது இலங்கையில் 1958 இல் வெளியான ஒரு தமிழ் செய்திப் பத்திரிகையாகும். வாழைச்சேனை கிழக்கு காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் கே. சி. தங்கராசாவால் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்களின் செய்திகளை அதிகளவில் தாங்கி வெளிவந்த

இப்பத்திரிகையானது கொழும்பிற்கு வெளியே இருந்து வெளிவந்த முதல் நாழிதழ் எனும் சிறப்பினைப் பெறுகின்றது. ஈழத்திலே உள்நாட்டுப் போர் இடம்பெற்ற வேளையிலே இப் பத்திரிகையானது பெரும்பான்மை இனத்தவர்களால் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வந்துள்ளது. (சிவனேசச் செல்வன், 2010)

வாரம் இரு முறையாக முளைவிட்டு 1961 ஆம் ஆண்டளவில் தினசரிப் பத்திரிகையாக மிளிர்ந்தது. எனினும் யாழ் நூலக எரிப்பு, பூபாலசிங்கம் புத்தகசாலை எரிப்பு போன்ற தாக்குதல்கள் ஈழநாட்டுப் பத்திரிகைக் காரியாலயங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டது. சமயம் அரசியல், பொருளாதாரம் என பல்வேறு செய்திகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இப் பத்திரிகையானது மேற்சொன்ன காரணங்களால் இடையில் தனது பணியினை முடித்துக் கொண்டு தற்போது புதுப் பொலிவுடன் யாழ்நகரில் மீண்டும் வெளிவந்துகொண்டிருப்பது சிறப்பான விடயமாகும்.

உதயன்

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் ஈ.சரவணபவன் அவர்களால் நிறுவப்பட்டு 1985.11.27 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவரும் ஓர் செய்திப் பத்திரிகையாகும். வட பகுதி மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற பத்திரிகைகளில் இது பிரதான இடத்தினை வகிப்பதோடு இந்து சமயம் தொடர்பன கட்டுரைகள், ஆலய திருவிழாக்கள் தொடர்பான செய்திகள், ஆன்மீகச் சிந்தனைகள், இராசிபலன் போன்ற விடயங்கள் இப் பத்திரிகைகளில் கணிசமான இடத்தினைப் பெறுவதனைக் காணலாம். (முகுந்தன், 2007)

வலம்புரி

வலம்புரி அன் கோ எனும் நிறுவனத்தால் வெளியிடப்படும் இப் பத்திரிகையானது 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் நாழிதழ் எனும் வகையில் நா. விசயசுந்தரம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு இது வெளிவருகின்றது. இதில் ஆசிரியர் தலையங்கம், சிறப்புச் செய்திகள், யாழ்ப்பாணச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், வணிகச் செய்திகள், சமயச் செய்திகள், விவாத அரங்கு, சங்குநாதம், கம்பராமாயணத் தொடர், இந்து சமய ஆன்மீகப் பெரியார்களின் அமுத மொழிகள் என பல்வேறு விடயங்கள் இடம்பெறுகின்றது. (முகுந்தன், 2007)

இவற்றினைப் போன்று புதியபூமி, முரசோலி, தமிழ்நாதம், திசை, ஈழநாதம், சங்குநாதம் போன்ற செய்திப் பத்திரிகைகளும் தோற்றம் பெற்றுள்ளதோடு காலத்திற்குக் காலம் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள் மற்றும் பல்வேறு காரணங்களினால் இன்று தமது பயணத்தினை நிறுத்திக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

**சமயப் பத்திரிகைகள்**

இந்த வகையிலே சமயப் பத்திரிகைகள் என்று பார்க்கின்ற போது பிரதானமாக யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையினரால் வெளியிடப்பட்ட பழமை வாய்ந்த "இந்து சாதனம்" எனும் பத்திரிகையானது 1889 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்துகொண்டிருக்கும் ஈழத்தின் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றாகும். இதன் முதற் பதிப்பு சைவபரிபாலன சபையினால் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் மாதம் இரு முறையாக புதன் கிழமைகளில் வெளிவந்தது.

முதலில் தமிழ் மொழியில் மாத்திரம் வெளிவந்த இந்து சாதனப் பத்திரிகை 1899 ஜீலை 10 ஆம் திகதி முதல் ஆங்கில மொழியிலும் வெளிவர ஆரம்பித்து. இது வாராந்தப் பத்திரிகையாகக் காணப்பட்டதோடு 1906 ஜீலை 11 இல் இருந்து தமிழ்ப் பத்திரிகை தனியாக மாதம் இருமுறை வெளிவந்தது. காலப்போக்கில் ஆங்கிலப் பதிப்பு நின்று போக தமிழில் மாதம் ஒரு பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருந்தது.

இவ்வாறிருக்கையில் தவிரக்கமுடியாத சில காரணங்களினால் கடந்த சில வருடங்களாக வெளிவராத இப் பத்திரிகை பல்வேறு சைவ அபிமானம் கொண்டவர்களின் முயற்சியினால் 19.08.2017 தொடக்கம் மாதம் இரு முறையாக மீண்டும் வெளிவரத் தொடங்கியது. இந்து சமயம் சார்பான கருத்துக்களிற்கு

முக்கியத்துவம் கொடுத்துவரும் இப்பத்திரிகை திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களிற்கு அளித்து வருகின்ற ஊக்கம் குறிப்பிடத்தக்கதாகும். (முகுந்தன், 2007)

இதே போன்று யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினரால் ஆண்டிற்கு ஒரு முறை வெளியிடப்படும் இதழாக காணப்படுவது ''சிவதொண்டன்'' எனும் வருடாந்த இதழாகும். யோகர் சுவாமிகளின் திருவுள்ளப்படி உருவான இவ் இதழானது அவரின் நினைவு தினத்தினை முன்னிட்டு வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவை இரண்டும் பத்திரிகை எனும் நிலையில் நின்று கொண்டு இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்திடுபவையாகக் விளங்குகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்று பிரதான இடம் பெறும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் ''அருள் ஒளி'' எனும் இதழ் தற்போது கலாநிதி ஆறு திருமுருகன் என்பவரை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டு வருகின்றது. 2002 ஆம் ஆண்டு தனது முதலாவது இதழை வெளியிட்டு இன்றுவரையும் தொடர்ச்சியாக மாதம் ஒருமுறை வெளியிடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் உள்ளடக்கத்திலே ஆன்மீகம் பற்றிய சிந்தனைகள், கட்டுரைகள், ஆலயங்களது வரலாறுகள் உலகளாவிய இந்து சமய நிகழ்வுகளின் பதிவுகள், புராண இதிகாச இலக்கியங்கள் பற்றிய பதிவுகள், போன்றவற்றினைத் தாங்கி காத்திரமான படைப்புக்களோடு வெளிவருகின்றது.

இதேபோன்று யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழுவினரால் ''நல்லைக்குமரன்'' எனும் இதழ், சிவபூமி அறக்கட்டளையினரால் வெளியிடப்படும் ''சிவபூமி ஆன்மீக இதழ்'', சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்படும் ''ஞானச்சுடர்'' என்பனவும் இவ்வகையில் பிரதான இடம் பெறுகின்றன. (சிவகுருநாதன், 2001)

**யாழ்ப்பாணத்தில் இந்துசமய, பண்பாட்டு வளர்ச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு**

**இந்து ஆலயங்கள் பற்றிய அச்சு ஊடகங்களின் வெளிப்பாடுகள்**

யாழ்ப்பாணப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் இந்துப் பாரம்பரியத்தினை இற்றைவரைக்கும் கட்டிக் காத்து வரும் பல வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங்கள் காணப்படுகின்றன. இவ் ஆலயங்களிற்கும் அச்சு ஊடகங்களிற்கும் பன்னெடுங் காலமாக மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதனையும் ஆலயங்களின் வளர்ச்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இவ் ஊடகங்கள் பல்வேறு பங்களிப்பினை வழங்கி வருவதனையும் அவதானிக்கலாம். ஆலயங்களின் தோற்றம், வளர்ச்சி, ஆலயத்துடன் தொடர்புடைய ஐதிகக் கதைகள், பூசை வழிபாடுகள் பற்றிய விபரங்கள், ஆலய புனர்நிர்மாண செய்திகள் போன்றன இவற்றில் இடம்பெறுகின்றன. (இந்து சாதனம், 2011) இவ்வாறு வெளிவருதல் காரணமாக ஒவ்வொரு ஆலயத்தினதும் சிறப்புகள் பற்றி ஏனையோரும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றது. மற்றும் அபிவிருத்திகள் மென்மேலும் கிடைக்கப்பெற்று ஆலயம் பிரசித்தம் பெறுகின்றது.

இன்றைய சில பத்திரிகைகள் அவற்றின் முகப்புப் படங்களிலே யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களின் படங்களையும், அது தொடர்பான விளக்கங்களையும் அச்சுப்பதிப்பது வழக்கமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக இந்து சாதனம், அருள் ஒளி போன்ற இதழ்களில் இவ்வாறு வெளிவருகின்றன. இது போன்ற முகப்பு அட்டைகள் காரணமாக பத்திரிகையை பார்த்தவுடனேயே வாசகர் மனதில் சமயப்பற்று வலுப்பெறுவதனையும் காணலாம்.

இந்துசாதனப் பத்திரிகையானது ஆலயங்களில் சமயத்தின் பெயரால் புரையோடிப்போய்விட்ட குறைபாடுகளையும் கண்டிக்கத்தவறவில்லை. ஆலயத்தில் நடைபெறுகின்ற வானவேடிக்கை, சின்னமேளம், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடுதல் போன்ற விடயங்கள் இந்த வகையில்

கண்டனத்துக்குள்ளாகின்றன. அதே சமயத்தில் இந்து சமூகத்தினரை மதமாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக கடுமையான விமர்சனங்களையும் இந்து சாதனம் வெளியிடத்தயங்கவில்லை.

இந்த வகையில் ''சைவ நிந்தனை பொறா மனமும்'' என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கமொன்று பின்வருமாறு நீண்டு செல்கிறது.

''.......சைவாபிமானமில்லாத ஒரு சைவனைக் காட்டிலும் தன் சமயத்தில் அபிமானம் பெரிதுடைய அந்நிய மதத்தவன் உத்தமனாவான் ஏனென்றால் இவன் தன் சமயத்திற்கு துரோகியாகின்றான் உத்தியோகத்திற்கும், அதிகாரத்திற்கும் அபேட்சை கொண்டு இருப்பதனாலேயே மற்றச் சமயவாதிகளும் இடையிடையே அதிகாரிகளும் நம் சமயத்தை நிந்திக்கத் தலைப்படுகின்றனர்''. (இந்து சாதனம், 2009)

திருக்கோயிற் பண்பாடு செம்மையாக அமையின் அது ஒட்டு மொத்த சமூகத்தையுமே செம்மையுடையதாக்கும் என்பதனை நன்கு உணர்ந்து கொண்ட இந்து சாதனம் இதனை வலியுறுத்தி அனேக ஆக்கங்களை காலத்துக்கு காலம் பிரசுரித்து வந்துள்ளது.

"ஆலய தரிசனமா? ஆடையாபரணக் காட்சியா?" என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரை சுவாமி தரிசனம் செய்வதற்காக ஆலயத்திற்குச் செல்வோர் உடம்பு, வஸ்திரம், மனம் ஆகிய மூன்றையும் தூய்மையாக வைத்திருக்கும் வழிமுறைகளை விடுத்து தமது புற அலங்காரங்களை நாடுகின்ற கேலிக் கூத்தினை விமர்சிக்கும் வகையில் அமைகிறது. (இந்து சாதனம், 2010)

மேலும் இந்து ஒருவன் ஆலயம் சென்று வழிபடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விதிமுறைகளையும் அவை செவ்வனவே பின்பற்றப்படாததை கண்டிக்கும் வகையிலும் ''ஆலய வழிபாடு எவ்விதம் ஈனதசை அடைந்தது'' எனத் தலைப்பிட்ட பிறிதொரு ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு அமைகிறது

"ஆலய தரிசனஞ் செய்வோர் ஆசார சீலராய் பயபக்தி உடையோராய் விளங்கினர் அருச்சனைக்குரிய திரவியங்களேதும் இல்லாது ஆலயம் செல்லர் முறை பிறழாது வணங்குவர் வெற்றிலை பாக்கு வாயிலிடர், மௌட்டிகம் பேசார், கைற்றடி ஏந்தார் வீண் வார்த்தை ஆடார் ஆலய சேவையில் அதிகாரியென்றும் தனவந்தனென்றும் பாகுபாடுகள் அக்காலத்தில் ஒரு போதுமில்லை.....''.

இது மட்டுமன்றி ஆலயங்களில் நடைபெறுகின்ற மகோற்சவங்களின் போது கோயிலதிகாரிகளும் உபயகாரர்களும் உற்சவத்தின் உண்மையான தாற்பரியத்தினை உணராமல் வாண வேடிக்கைகள், சின்னமேளங்கள் போன்றவற்றை நிகழ்த்தி ஆலய மகோற்சவத்தையே கொச்சைப்படுத்துவதை நாவலர் வழியில் இந்து சாதனமும் பல சந்தர்ப்பங்களில் கண்டித்து வந்துள்ளது.

''ஆலயங்கள் பலவற்றுள் குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொள்வார் போல் கோயிலதிகாரிகளும் பூரண ஞானமில்லாத உற்சவாசிரியர்களும் உற்சவம் நடத்தும் உபயகாரர் எனப்படுவோரும் இந்த மகோற்சவங்களை தம் மனம் போன போக்கில் நடாத்த தலைப்படுகின்றனர்''

எனத் தொடங்குகின்ற ஆசிரியர் தலையங்கம் ஒன்று இதற்கு பொருத்தமான எடுத்துக்காட்டாக அமைகின்றது.

நல்லைநகர் நாவலர் பெருமான் அவர்களால் எம்மண்ணில் தோற்றுவிக்கப்பட்ட சமயப் பிரசங்க மரபினால் மக்கள் சீர்பெற்றனர். சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட வரலாறு சிறப்பாகப் பேசப்படுகிறது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயப் பிரசங்கத்தால் பல கோவில்களில் கேளிக்கை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டமை மறக்கமுடியாது. தமிழ் நாட்டிலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முதல் பல பெரியவர்களை ஈழத்து ஆலயங்களுக்கு அழைத்து

அவர்களின் தொடர் விரிவுரைகளைக் கேட்பதற்கு மக்கள் திரண்டு வந்த நாள்களை இன்றைய தலைமுறை அறியாது. கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களது இராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் 1995 இற்கு முன் யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது.

ஆனால் இன்று ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் சமயப் பிரசங்கம் இடம்பெறுவதில்லை. அதற்கான முக்கியத்துவம் அருகிவருவது வேதனைக்குரியது. ஏனைய சமயத்தவர்கள் தமது சமய வழிபாட்டு நிகழ்வில் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். மக்களுக்கு ஒழுக்க விழுமியங்களை தமது ஆலயங்களில் மிக முக்கியமாக எடுத்துக் கூறுகிறார்கள். வெறும் கிரியை வழிபாட்டுடன் மட்டும் எமது ஆலய விழாக்கள் நடைபெறுவது பூரணத்துவம் பெறாது. ஆலயங்களிலும் ஆன்மீக நற்சிந்தனைகள், சமயப் பிரசங்கங்கள் நடைபெற அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும் என்று அக் கட்டுரை தொடர்கின்றது. (இந்து சாதனம், 2009)

இன்று இந்து ஆலயங்களிற்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைச் சம்பவங்களிற்கு பத்திரிகைகள் போன்றன கண்டனங்களை வெளியிட்டு வருவதனைக் காணலாம். உதாரணமாக 2009 ஆம் ஆண்டு திருக்கேதீச்சர ஆலயத்திற்கு முன்பாக இந்துக்களால் அமைக்கப்பட்ட நுளைவு வாயிலானது கத்தொலிக்க சமயத்தைச் சார்ந்த சிலரால் அகற்றப்பட்ட போது அதனை மீள அமைக்க வேண்டும் என ''தீருக்கேதீச்சர விவகாரத்தில் இந்தியா தலையிடவேண்டும்.'' (இந்து சாதனம், 2011) என்கின்ற ஆசிரியர் தலைப்பில் அமைந்த செய்தியொன்றில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து வலியுறுத்தியதனை 06.20.2019 வெளியான உதயன், வலம்புரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் காணமுடிந்தது.

**அச்சு ஊடகங்களும் இந்து சமயப் பெரியார்களும்**

இந்து சமயத்தை வளர்த்த பெரியார்களிற்கும் அச்சுத் துறைக்குமான தொடர்பானது இன்று நேற்று உருவான ஒன்றல்ல. இன்றைய இதழ்களிலே அதிக பக்கங்களில் இடம் பிடிப்பது சைவ நாயன்மார்களின் வரலாறுகள், அவர்களின் குருபூசை தினங்கள் தொடர்பான செய்திகள், அவர்கள் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகள் போன்றனவாகும். ஆறுமுகநாவலர், சேர் பொன். இராமநாதன், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரை இவ்வகையில் பிரதானமாகக் கூறமுடியும். (சிவகுருநாதன், 2001)

அச்சு ஊடகங்களிலே ஈழத்தில் பிரசித்தம் பெற்ற சித்தர்களின் வரலாறுகள் அவர்களின் மகிமைகள் போன்றனவும் பிரதான இடம் பெறுகின்றது. உதாரணமாக சிவதொண்டன் இதழின் உருவாக்கமானது ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் சீடர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டதோடு இன்று வரை அவரின் சிந்தனைகளிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

15.05.2018 வெளியான இந்து சாதனம் பத்திரிகையானது திருஞானசம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''சைவத் தலைமகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தர்'' என்கின்றது. ''சம்'' என்றால் நல்ல என்பதும் ''பந்தம்'' என்றால் உறவு என்பதுமாகும். எனவே சிவஞ்ஞானத்துடன் நல்லுறவு கொண்டவர் ஞானசம்பந்தர்.

''யாவர்க்கும் தந்தையாய் எனுமிவரிப் படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராம் அகில
தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச்சிவ ஞானசம்பந்தர் ஆயினார்''

இச் சிறப்பானது பெரியபுராணப் பாடலின் மூலம் மேல்வருமாறு எடுத்துரைக்கப்படுகின்றது. மேலும் இப் பத்திரிகையில் ''திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்ததும், மதுரையில் பாண்டியன் வெப்பு நோய் நீக்கி அன்புநெறி வளரச் செய்ததும், மயிலாப்பூரில் பூம்பாவை எனும் பெண்ணின் சாம்பலை

தன் தமிழிசையால் உயிரளித்ததும் வியக்கத்தக்கன'' என்று சம்பந்தரின் அற்புதங்களை விவரிப்பதனைக் காணலாம்.

இந்து சமயத்திற்குத் தொண்டாற்றிய நாயன்மார்கள், மற்றும் பெரியார்களின் குருபூசை தினங்கள் தொடர்பான செய்திகள் இன்றும் இவ்வாறான அச்சு ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருப்பது தற்காலத்தில் உள்ள இளம் சமுதாயத்தினருக்கு விளிப்புணர்வை ஏற்படுத்துவதாக உள்ளது. உதாரணமாக 04.07.2017 அன்று வெயியிடப்பட்ட அருள் ஒளி இதழானது கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஒன்பதாவது ஆண்டு குருபூசை தினத்தையும், அன்று இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள், தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்த அறக்கொடை வழங்கல் தொடர்பான செய்திகளையும் வெளியிட்டுள்ளமையைக் காணலாம். (இந்து சாதனம், 2009)

**இந்துக் கல்வி விருத்தியில் அச்சு ஊடகங்கள்**

(01) பாடசாலைகளில் சைவப் பண்பாடு

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுகன் அவர்கள் இன்று பத்திரிகைகள் போன்றவற்றில் எழுதி வரும் கட்டுரைகள் இந்து சமயத்தினரை விளித்தெளச் செய்யும் முகமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் அவர் இந்து சாதனத்திற்கு எழுதிய கட்டுரை ஒன்றிலே குறிப்பிடுகையில் தமிழ் நாட்டிலே 85 சதவீதமான இந்து மக்கள் வாழ்கின்றனர். ஆனால் பாடசாலைகள் தேவாரம் பாடி ஆரம்பிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் தமிழ் நாட்டிலே நிறுவன ரீதியிலாக இந்து சமயம் பாதுகாக்கப்படாமையே எனவும் ஆனால் இலங்கையில் இற்றை வரைக்கும் இப் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு சைவ வித்தியா விருத்திச் சங்கம் அமைத்த பாடசாலைகளும், சைவ சான்றோர்கள் அமைத்த பாடசாலைகளும் தேசிய மயமாக்கப்படுகின்றபோது ஒரு வாசகம் எழுதப்பட்டது ''இந்தப் பாடசாலை எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த மரபு இந்தப் பாடசாலைகளிலே பேணப்பட வேண்டும்'' என்பதே அவ் வாசகமாகும். (சிவகுருநாதன், 2007)

இதன் காரணத்தினாலேயே எந்தக் காலத்திலும் சமயம் சார்பாகத் தொடங்கப்பட்ட இந்துக் கல்லூரிகளிலே திருமுறை பாடப்படவேண்டும், சிவபுராணம் பாடப்பட வேண்டும் என எழுதப்பட்டது என்று அவர் கூறுகின்றார். நாயன்மார்களின் குருபூசை தினங்கள் போன்றவற்றை பாடசாலைகளில் நடாத்த வேண்டும் என்கின்ற எண்ணக்கருவானது இன்று சமுதாயத்திலே ஏற்படுவதற்கு இவ்வாறான செயற்பாடுகள் வித்திட்டன எனலாம்.

''சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும்'' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் சிவபூமி அறக்கட்டளையினரால் வெளியிடப்படும் இதழாகிய ''சிவபூமி ஆன்மீக இதழ்'' கீழ்வரும் கருத்துக்களை வலியுறுத்துவதனைக் காணலாம்.

''ஈழத்திருநாட்டில் முதலாவது சைவத்தமிழ்ப் பாடசாலையை ஆரம்பித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். அப் பெருமகனாரின் முயற்சி பல நூற்றுக்கணக்கான சைவத்தமிழ்ப் பாடசாலைகள் இலங்கை முழுவதும் ஆரம்பிக்க வித்திட்டது'' (தியாகராஜா, 2007)

''சைவப்பாடசாலைகளில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள் தொடர்பாக நாவலர் பெருமானும் அவரைத் தொடர்ந்து பாடசாலைகளை ஸ்தாபித்த ஸ்தாபகர்களும் சில வரையறைகளை வகுத்துப் பேணினர். சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனையில் திருமுறை பாடுவதுடன் பாடசாலை மூடும் வேளையிலும் திருமுறை பாடி மூட வேண்டுமென உயர்ந்ததோர் மரபு பேணப்பட்டது'' (தியாகராஜா, 2007)

''நாயன்மார்களது குருபூசையையும், நவராத்திரி போன்ற சமய விழாக்களையும் பாடசாலைகள் பக்திபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டுமென சைவபரிபாலனசபையும், சைவவித்தியாவிருத்திச் சங்கமும், இந்துக் கல்லூரி அதிகாரசபையும் நெறிப்படுத்தி வந்தனர்.'' (தியாகராஜா, 2007)

“1960 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளை தேசியமயமாக்க அரசு முன்வந்த வேளை ஸ்தாபகர்களின் நோக்கங்களையும், பாடசாலைகளின் பாரம்பரிய மரபுகளையும் தொடர்ந்து அரச பாடசாலை பேணும் எனத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலைகள் கையளிப்பு பத்திரத்திலும் இவ் விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தன. சைவத்தமிழர்கள் 19 ஆம் நூற்றாண்டில் மிஷனரியின் நிர்வாகங்களில் இயங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கச் சென்றால் அவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறவேண்டுமென மிஷனரிகள் வலியுறுத்தி வந்தன. அரச உத்தியோகங்கள் முதல் பல விடயங்களுக்கு மதமாற்றமும், ஞானஸ்தானமும், பெயர் மாற்றமும் அவசியமாக இருந்தது.” (தியாகராஜா, 2007)

“சைவமக்களை கல்வியின் பெயரால் மதம் மாற்றம் செய்வதைத் தடுப்பதற்கு சைவத்தமிழ்ப் பாடசாலைகள் ஊர்தோறும் நிறுவப்பட்டன. இப்பாரம்பரிய வரலாற்றை இன்றைய கல்விச் சமூகம் நன்கு உணரவேண்டும்.”

“இன்று பல சைவப் பாடசாலைகளில் என்றும் இல்லாதவாறு பிற சமய விழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் கிறிஸ்தவப் பாடசாலைகள் பிற மதவழிபாட்டிற்கு எவ்விதத்திலும் அனுமதிப்பதாக இல்லை. சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலையின் மரபைக் காக்கவேண்டும். இவ்விடயத்தில் கல்வி நிர்வாகிகள் ஸ்தாபக குடும்ப உறுப்பினர்கள், சமய நிறுவனங்கள் மிகவும் விழிப்பாகச் செயற்படவேண்டும். இல்லையேல் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்” (இந்து சாதனம், 2009)

“சமய சமரசம் என்பது நன்மை எனக் கருதினாலும் சில சமயத்தவர்கள் திட்டமிட்டு மதம் மாற்றுவதும் சைவ மக்களை ஏமாற்றுவதும் தொடர் கதையாக உள்ளது. கிழக்கிலங்கையில் வறுமையைப் பயன்படுத்தி பலரை இஸ்லாம் மதத்திற்கு மாற்றி வருவது கவலையளிக்கிறது. நாம் பெருந்தன்மையோடு பிற மதத்தை மதிக்கின்றோம். ஆனால் சில சமயத்தவர்கள் சந்தர்ப்பம் பார்த்து எம்மை ஏமாற்றத் தொடங்கிவிட்டார்கள். இதில் நாம் விளிப்பாக இருக்கவேண்டும்” என தற்காலத்தில் சைவத் தமிழ்ப் பாடசாலைகளில் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

(02) இந்துக் கல்வி நிறுவனங்கள்

அருள் ஒளி சஞ்சிகையானது 2016 ஆம் ஆண்டு வெளிவந்த தனது 117 வது இதளிலே சேர் பொன் இராமநாதனின் கல்வியிலக்குப் பற்றி விவரிக்கையில் “இராமநாதன் வெறும் வாய்ச்சொல் வீரர் அன்று அவர் செயல் வீரர் அவரின் செயல் வீரத்திற்கு எடுத்துக்காட்டே 1913 ல் மருதனார் மடத்தில் அமைக்கப்பட்ட இராமனாதன் மகளிர் கல்லூரியும், 1919 இல் திருநெல்வேலியில் அமைக்கப்பெற்ற பரமேஸ்வராக் கல்லூரியும் ஆகும்” என்கின்றது. (முகுந்தன், 2007)

“பரமேஸ்வராக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்” எனும் சிறு நூலிலே இராமநாதன் குறிப்பிடுபவை இங்கு எடுத்துக்காட்டாப்பட்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு.

“பரமேஸ்வராக் கல்லூரி, இந்திய ஞானிகளின் ஞானத்தோடு தமிழ், சங்க இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவெனத் தாபிக்கப்பட்டது. இக்கல்வியால், தீயவன் நல்லவனாய் மாறும் நன்மை ஏற்படும். குறும்புகளாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன், அவற்றினை அடக்கி நற்பணிகளுக்கு உதவுவோனாவான். மந்தை போலச் சோம்பி, வேலையற்று உழல்பவன் அத்தகைய தீமையிலே தோயாதவரை ஊக்கமுடையோனாயும் பிறர் நலம் கருதுவோனாயும் மாறுவான். (இந்து சாதனம், 2009)

முரடனாயும், ஆபாசச் செயல்களில் ஈடுபடுபவனாயும் இருப்பவன் சீர்திருத்தப்படுவான். குறுகிய மனப்பான்மையும் வெறுப்பும் உடையோன் அனுதாபமும், சகிப்பு மனப்பான்மையும் எய்தப்பெறுவான். ஒரு பிரச்சினையையோ, அதன் வளர்ச்சியையோ அறிந்து தீர்க்க இயலாதவன் அவற்றை உடனடியாக

இனங்கண்டு கொண்டு அவற்றின் காரணங்களை ஆராய்ந்து, பரிகாரந் தேடும் வழிவகைகளை அறிந்து நலம் வளர்க்கும் பணிகளிலே ஈடுபடுவான்'' எனும் இராமனாதனின் கருத்துக்கள் இந்நூலில் வெளிப்படுவதனைக் காணலாம். (முகுந்தன், 2007)

சேர் பொன் இராமநாதன் போன்ற சைவத் தமிழ்க் காவலர்களின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீண்டநாள் கனவாகிய இந்து நாகரிக பீடத்தின் உருவாக்கம், மற்றும் இந்துக் கற்கைகள் பீடத்தின் அவசியம் பற்றியும் யாழ் இந்துப் பத்திரிகைகள் பெரிதும் வலியுறுத்தி வந்துள்ளன.

''யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்து சமய தத்துவ பீடம் விரைவில் உருவாக வேண்டும்'' எனும் கட்டுரையில் ஈழத் திருநாட்டில் உருவான பல்கலைக்கழகங்களில் சைவ மக்களின் பெருஞ்சொத்துக்களை காணிக்கையாக்கி உருவானதே யாழ் பல்கலைக்கழகமாகும. சைவ சமயத்தவர்களின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானின் பெயரில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் 1916 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை கட்டுவித்தார். இக்கல்லூரியின் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 1974 இல் யாழ் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்டது. (இந்து சாதனம், 2009)

இப்பல்கலைக்கழம் திறப்பதற்கு முன்பு இலங்கையில் பௌத்தர்களுக்கான பிரிவெனா பல்கலைக்கழகம் உட்பட சில பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்தன. யாழ் பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட நாள் முதல் இந்து சமய கல்விக்கான பீடம் உருவாக்கப்பட்டு இந்துக்களின் வரலாறு பண்பாடு தத்துவம் தொடர்பான பரந்த ஆராய்ச்சி இடம்பெறவேண்டுமென பலரும்குரல் கொடுத்தனர். எனினும் இதுவரை பயன் கிட்டவில்லை தற்பொழுது இலங்கையில் பதினைந்திற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் அரச பல்கலைக்கழகங்களாக இயங்கி வருகின்றன. இதைவிட தனியார் பல்கலைக்கழகங்களும் வேகமாக உருவாகி வருகின்றன. கிழக்கிலங்கையில் இரு பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. அங்கு பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய பீடம் உருவாக்கப்பட்டுவிட்டது. ஆனால் வெள்ளிவிழாக் கண்ட யாழ் பல்கலைக்கழகத்தில் இந்துப்பீடம் இன்றும் உருவாகவில்லை.

இதற்கான முயற்சிகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பலர் ஆவலோடு காத்திருக்கிறார்கள். பல மேடைகளில் இந்துப் பீடத்தின் அவசியம் பற்றி சான்றோர் பெருமக்கள் எடுத்துரைத்து வருகிறார்கள். இந்தியாவில் உள்ள வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பல மேலைத்தேயத்தவர்கள் கற்று வருவதும் ஆய்வுகளை செய்வதும் அனைத்துலகமும் அறிந்ததே. அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் இந்துப்பீடம் உருவாக்கப்பட்டு இந்து மெய்யியல் ஆராய்ச்சியும் யோக கற்கைநெறியும் சிறப்புப் பெற்று வருவதை கல்வியாளர்கள் அறிவர். இதே போன்று எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்துக் கற்கைகள் பீடத்தின் அவசியத்தினை 2019 தை மாதம் வெளிவந்த அருள் ஒளி இதழானது விரிவுபட எடுத்துக் கூறுகின்றது.

இவ்வாறான கருத்துக்களின் பயனாக இன்று உருவானதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடமாகும். இதன் உருவாக்கம் பற்றியதான செய்திகளை ''இராமநாதன் அவர்களிக் கனவு நனவாகக் கூடிய சூழல் இன்று உருவாகியுள்ளது தனது சொத்துக்களை பார்வதி பரமேஸ்வரன் சாட்சியாக கல்வித் தர்மத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என அப்பெருமகன் அர்ப்பணம் செய்தவர் அவருக்குச் சொந்தமான நிலத்தில் உருவான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவரது சிந்தனைகளைப் பேணிப் பாதுகாப்பது பெரும் கடமையாகும்'' என அவ்விதழ் குறிப்பிடுகின்றது. (ஜெயப்பிரகாஷ், 2015)

மேலும் இந்து நாகரிக பீடத்தில் சகல பண்பாட்டுக் கலை வடிவங்களும் தத்துவவியல் விடயங்களும் சரியான முறையில் கற்பிக்கப்படல் வெண்டும். அருகிவரும் நாதஸ்வர, தவில் போன்ற மங்கள வாத்தியக் கலைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் கீழைத்தேய மற்றும் மேலைத்தேய ஒப்பீட்டாய்வுகள் சரியான

முறையில் அமைய வேண்டும். மேலை நாட்டவரும் இந்துத் தத்துவவியலை கற்பதற்கு வசதிகள் செய்யப்படல் வேண்டும் இந்தியா வாரணாசியில் உள்ள இந்துப் பல்கலைக்கழகம் போன்று எங்கள் இந்து நாகரிக பீடமும் எதிர்காலத்தில் பரிணமிக்க வேண்டும். எனும் கருத்துக்களும் இவ்விதளில் வெளிப்படுவதனைக் காணலாம்.

**சமய நல்லுறவு**

இந்து சாதனத்தினுடைய 01.03.2018 ஆம் திகதியில் வெளிவந்த பத்திரிகை ஒன்றிலே ''இந்து சமய அடிப்படை விடயங்களை சிங்கள மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் சிங்கள மொழியில் சிறு சிறு நூல்களாக வெளியிடப்பட வேண்டும்'' என்றவாறு அமைந்த ஆசிரியர் தலையங்கம் ஒன்று காணப்படுகின்றது.

சிங்கள மொழி பேசும் மக்கள் பரந்து வாழும் இடங்களில் உள்ள இந்துச் சைவ ஆலயங்களிற்கு அவர்கள் பெருமளவில் வருகை தந்து உளமார வழிபடுவதை நாம் காணலாம். ஆனால் அங்குள்ள விதிமுறைகள், சிறிய நுட்பங்கள், சிறப்புகள் இவற்றை அவர்களுக்கு உணர்த்துவார் யாரும் இல்லை. சாதாரணமாக விபூதி என்பது என்ன? அதை எப்படி அணிய வேண்டும்? கணபதி, முருகன், சிவன், அம்பாள், விஷ்ணு போன்ற கடவுளரின் வரலாறு என்ன? உருவச் சிறப்பு என்ன? பல தெய்வ வழிபாடு மூலம் ஒன்றே கடவுள் என்பதை எவ்வாறு உணர்வது?'' என்பவற்றை உள்ளடக்கி சகோதர மொழிகளில் நூல்களை எழுத வேண்டும் என மேல் குறிப்பிடும் கட்டுரை விளக்குகின்றது. (ஜெயப்பிரகாஷ், 2015)

இவ்வாறு அமைகின்ற கருத்துக்களானது பிற மதங்களோடு இந்து மதத்தினை ஓர் நல்லிணக்கப் பாதையில் இட்டுச் செல்வதோடு. பிற மதத்தவரும் இந்து மதத்தை உயர்ந்த இடத்தில் வைத்தப் பார்க்கும் வழிவகையினைச் செய்கின்றது.

இந்துக்களின் அரசியல், சமூக, சமய, பொருளாதாரக் கல்வி மறுமலரிச்சிக்கான சிந்தனை நாற்றுமேடை யாகவே இந்து சாதனம் தொழிற்பட்டது. அறிஞர் பே. சு. மணி அவர்கள் ''இத்து சாதனம் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியின் குரலாகவே ஒலித்தது" எனக் கூறியிருப்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

இவற்றை அரண்செய்யும் வகையில் இந்துசாதனத்தின் பரந்த விடயப்பரப்பிலிருந்து வகை மாதிரி எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம். ''தாழ்த்தப்பட்ட சாதியராம்'' என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங்கமொன்று இவ்வாறு தொடர்கிறது. (ஜெயப்பிரகாஷ், 2015)

''எந்த வருணத்து உதித்தோரும் கல்வியறிவு ஒழுக்கமுடையரேல் அவர் எல்லா வர்ணத்தினராலும் கைக்கொள்ளப்படுவர். இந்து மதக் கொள்கையின் படி ஒருவனை உயர்த்துவதும் தாழ்ந்துவதும் அவனுடைய ஒழுக்கமேயல்லாமற் சாதியன்று. நந்தனர், திருவள்ளுவர் முதலானோர் இதற்குத் திருஷ்டாத்தகமாக விளங்குவர்".

வர்ணாச்சிரம தர்மத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கும் தவறாக அர்த்தங் கற்பித்துச் சமூக அடுக்கமைவை நியாயப்படுத்துவோர்க்கும் உண்மையை விளக்க முற்படுவதாக மேற்படி ஆசிரியர் தலையங்கம் அமைகிறது.

**பண்பாட்டு மரபில் அச்சு ஊடகங்கள்**

இந்து சாதனம் பத்திரிகையானது 28.07.1989 ஆம் ஆண்டு வெளியான பத்திரிகையிலே ''ஆடி அமாவாசை இந்து சமயத்தைச் சார்ந்த அனைவராலும் சிரத்தையடன் அனுட்டிக்கப்படும் அதி முக்கியத்துவம் வாய்ந்த விரத தினம் இத் இத் தினத்தை தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் அல்லது இந்துக்களுக்கு மட்டுமான விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்த வேண்டும்'' என்கின்ற கோரிக்கையினை முன்வைத்து அதனைத் தலைப்புச் செய்தியாகக் கொண்டு வெளியானது. (ஜெயப்பிரகாஷ், 2015)

ஆடி அமாவாசை தினத்தன்று இந்துக்கள் சமுத்திரத்தில் அல்லது கடலோடு இணைந்த புனித நதிகளில் தீர்த்தமாடி அவ்விடங்களில் தமது முன்னோர்களை நினைவு கூர்ந்து பிதிர்க்கடனாற்றி விரதமிருந்து ஆலய வழிபாடு செய்வர். யாழ் குடாநாட்டில் கீரி மலை, வில்லூன்றி, திருவடிநிலை போன்ற புண்ணிய நீர் நிலைகள் பிதிர்க்கடனாற்றும் பிரதான நிலையங்களாகும். இவ்விடங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவர். இலங்கை சுதந்திரமடைந்தபின் ஒரு காலகட்டத் தில் ஆடி அமாவாசை தினம் இலங்கைத் தேசிய விடு முறை தினங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

தேசிய விடுமுறை தினங்கள் பட்டியல் ஒரு சமயம் மறுபரிசீலனை செய்யப்பட்ட போது ஆடி அமாவாசை தினம் தேசிய விடுமுறை தினப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இருந்த போதிலும் யாழ் குடாநாட்டில் ஆடிஅவாசை தினம் பிரகடனப்படுத்தப்படாதவொரு விடுமுறை நாள் போலவே கொள்ளப்பட்டு அரச, தனியார் நிறுவனங்கள் அன்று மந்த கதியிலே இயங்குவது வழமையாகும். (ஜெயப்பிரகாஷ், 2015)

ஆடி அமாவாசை தினம் யாழ் மாவட்டத்தில் உள்ளளூர் விடுமுறை தினமாக்கப்பட்டு அதற்குப் பதில் இன்னோர் வார இறுதிநாள் வேலை நாளாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குக் கடந்த சில ஆண்டுகளாகப் பல இந்து சமய ஸ்தாபனங்களால் விடுக்கப்பட்டு வந்தது.

கண்டி பெரகரா இறுதிநாளைக் கண்டி மாவட்டத்தில் உள்ளளூர் விடுமுறை தினமாகவும் பிறிதோர் வார இறுதி நாளை வேலை நாளாகவும் செய்வது போன்றதொரு ஏற்பாடு யாழ் மாவட்டத்தில் அமாவாசை, நல்லூர்த் தேர்த் திருவிழா ஆகிய ஆகிய இரு தினங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது யாழ் மாவட்டப் பெரும்பான்மை மக்களின் விருப்பமாகும். ஆடி அமாவாசை தினம் வடக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண விடுமுறை நாளாகவும் இதர மாகாணங்களில் இந்துக்களுக்கு மட்டுமான விடுமுறை நாளாகவும் பிரகடனப்படுத்தப்படுவது இந்துப் பெரு மக்கள் தமது மிக முக்கியமான சமயக் கடமையை நிறைவேற்ற உதவும் என்று இந்து சாதனம் வலியுறுத்துகின்றமையினைக் காணலாம்.

**வாழ்வியல் நெறிமுறைகள்**

வாழ்வியல் நெறிமுறைகள் பற்றியும் அவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் இன்றைய பத்திரிகைகள் சிறப்பாகக் கூறுவதனைக் காணலாம். தனிமனிதன் ஒருவன் எவ்வாறான வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டும், இல்லறத்தில் அவன் எவ்வாறாக வாழ்க்கை நடாத்த வேண்டும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிமுறைகள் போன்றன இங்கு பிரதான பேசுபொருளாக உள்ளது.

(01) சமய சிந்தனையுடனான வாழ்வியல்

இன்று எங்குமே விரைவு என்பதே பேச்சு எல்லா வற்றையும் மிக வேகமாகப் பெற்றுவிட வேண்டும் என்பதே மனிதர்களின் பெருவிருப்பாக உள்ளது. கல்வி, பொருள், நிலம் என்பவற்றையெல்லாம் வெகு விரைவாகப் பெறுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. அந்த முயற்சிகள் எல்லாம் நேர்மையானவை என்று சொல்வதற்கில்லை. குறுக்கு வழியால் எல்லாவற்றையும் பெற்றுவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எல்லோருடைய நினைவிலும் நிலைபெற்றுவிட்டது. இவ்வாறான கருத்துக்களை எடுத்துக்காட்டும் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் தொடர்ச்சியாக வெளிவருட் ''சமயம் ஒரு வாழ்வியல்'' எனும் கட்டுரைகளை இந்துசாதனம் தொடர்ச்சியாகப் பிரசுரித்து வருகின்றது. (ஜெயப்பிரகாஷ், 2015)

குறிப்பாக இன்றைய இளம் பெற்றோர் உள்ளம் குறுக்கு வழிகளையே நாடி நிற்கிறது. தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்தை ஒரு படிமுறை வளர்ச்சியோடு திட்டமிடும் பொறுமையற்றவராயுள்ளனர். உடல்வளர்ச்சி, மனவளர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது செயற்படுகின்றனர். இந்த நிலையில் ஒரு மாற்றம் தேவை. அந்த மாற்றத்தை எவ்வாறு கொண்டு வரலாம் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கும் போது எமது சமய வாழ்வியல் நடைமுறைகளை ஒருமுறை நிதானமாக நோக்க வேண்டியுள்ளது.

சமயம் மனித வாழ்வின் படிமுறை வளர்ச்சிகள் பற்றிய தெளிவை ஊட்டுவதற்குச் சில நடைமுறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மனித மனத்தைப் பொது நோக்கிலே வழிப்படுத்துகிறது. எல்லாரும் ஒரு நிலையில் ஒரு நோக்கோடு ஒன்றிணைந்து வாழ்வதே நிறைவான வாழ்வு என்பதைப் பல வழிகளில் விளக்கியுள்ளது. குழந்தை முதல் முதியவர் வரையுள்ள இடைவெளிகளைக் கடப்பதற்கும் அந்நிலையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் ஒரு பொதுவான சிந்தனையை உருவாக்கியுள்ளது.

எம்முடைய வாழ்வியலை இயற்கையோடு இணைத்து விடுவதில் சமயச்சிந்தனையாளர்கள் பெரு முயற்சி செய்துள்ளனர். ஐம்பெரும் பூதங்களென இயற்கைச் சக்திகளை வகைப்படுத்தி மனித வாழ்வியலோடு தொடர்புறுத்தியுள்ளனர். சமயச் சிந்தனையோடு ஒன்றியிருந்த மெய்யடியார்கள் இதனைத் தமது பாடல்களிலே விளக்கியுள்ளனர் எனத் தொடர்கின்றது அவரின் கட்டுரைகள்.

(02) ஐம்பொறிகளின் அடக்கம்

ஐம்பூதங்களான இயற்கைச் சக்திகள் மட்டுமன்றி செயற்பாட்டையும் நாமே ஐம்புலன்களாக மனித உடலுறுப்புக்களின் கட்டுப்பாடு செய்ய வேண்டுமெனவும் விளக்கியுள்ளனர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளையும் தம் இச்சைப்படி செயற்பட விடாமல் நாமே அவற்றை அடக்கியாளும் திறமைபெற வேண்டுமெனச் சமயம் வலியுறுத்துகிறது.

ஐம்பொறிகளால் வெளிப்படும் புலன்கள் எவ்வாறு தன்னைச் செயற்பட விடாது தடுத்தன என்பதை மணிவாசகரின் பாடலடிகள் மூலம் 17.07.2010 அன்று வெளிவந்த இந்து சாதனம் பத்திரிகையின் ஊடாக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

''ஆனைவெம் போரில் குறுத்தூறு
எனப் புலனால் அலைப்புண்
டேனை யெந்தாய் விட்டிடுதி கண்டாய்
வினையேன்....'' ஊ

அதாவது களத்திலே நெற்கதிர்களைப் போட்டு யானையைவிட்டு மிதிக்கச்செய்து நெல்லைத் தூற்றுகின்றபோது யானையின் காலடியிலே கிடக்கின்ற வைக்கோலைப் போல தான் ஐம்புலன் களால் வதைபடுவதாக மணிவாசகர் பாடியுள்ளமை இங்கு எடுத்துக் கூறப்படுகின்றது.

அந்த ஐம்புலன்களையும் அடக்கியாள்வதற்கான பயிற்சியைக் கோயில்களிலே பெற்றுக் கொள்ளலாம். மனம் பொறிவழிகளிற் செல்லாமல் இருப்பின் செயற்பாடுகள் ஒழுங்காக இருக்கும். இத்தகைய பயிற்சியினால் இளமையும் முதுமையும் ஒன்றாய் இணைந்து செயற்பட முடியும். கோயில்களிலே இத்தகைய இணைந்த பணி இன்று மிகவும் தேவையாக உள்ளது.

இளைய தலைமுறையினர் இன்று விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியால் எல்லாப் பணிகளையும் வேகமாக யாரும் செய்து விடலாம் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். ஆனால் எல்லாச் செயற்பாடுகளும் ஒரு வளர்ச்சி நிலையில் நிதானமாகச் செய்யப்படவேண்டியவை என்பதை அவர்கள் உணரவேண்டும். மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டுமாயின் மனம் ஒருமைப்பட்ட செயற்பாடு தேவை. பொதுநோக்கோடு இளந்தலைமுறையினர் செயற்படகோயிற் பண்பாடு வாய்ப்பளிக்கும்.

பொய், போட்டி, பொறாமை என்னும் தீயகுணங்களின் வயப்படும் இளமையின் சுயநலமான சிந்தனையைக் களைந்து நல்வழியிலே அவர்களை நடத்த வேண்டியுள்ளது. அதனால் ஐம்புலன்களையும் பிறருக்காகப் பணி செய்யப் பழக்கி அதன் மூலம் பொது நலவாதிகளாக அவர்களை மாற்றவேண்டும் நாயன்மார்கள் அதனையே செய்தார்கள். தமது புலன்களை அடக்கிப் பிறர்நலம் பேணும் கடவுட் குணத்தை மேற் கொண்டார்கள். (ஜெயப்பிரகாஷ், 2015) அதுபோலவே இன்றும் அறுபது வயதின் பின்னரும் தலைமுடியை நிறம் மாற்றித் தன்னை இளமையாகக் காட்ட முனையும் பெரியவர்கள் முதலில் தமது ஐம்புலன்களையும் அடக்கியாளும் தன்மை பெறவேண்டும் என இந்துசாதனத்தின் கட்டுரையானது நாம் ஐம்புலன்களை

ஒடுக்கிச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் இன்றைய இளைய சமுதாயத்தினர்க்கு விளிப்புணர்வினையும் ஏற்படுத்துக் கருத்துக்களைக் கூறுகின்றது.

**பண்பாட்டுப் பாதுகாப்பு**

திருமணச் சடங்கு என்பது தமிழர்தம் நடைமுறை வாழ்வியலில் பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படகின்றது. இந்தியா, இலங்கை போன்ற தமிழர் பண்பாடுகளைக் கொண்ட நாடுகளில் திருமணச் சடங்கு சிறப்பான முறையில் பயில் நிலையில் உள்ளது. எனினும் இன்று மேலை நாட்டு மக்கள் மத்தியிலும் அதிகம் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றாகவும் இந்துத் திருமணச் சடங்கு விளங்குகின்றது. இவ்வாறான திருமணச் சடங்கு முறைகளில் உள்ள தமிழர்தம் பண்பாட்டு மரபுகளையும் ஆடையமைப்புக்களையும் மேலைத்தேயத்தவர் விரும்பி ஏற்றுக் கொள்கின்ற போதிலும் நம் நாட்டு இந்துத் திருமணங்கள் மேலைநாட்டுக் கலாச்சாரத்துடன் நடைபெறுவது வருத்தமளிக்கும் விடயம் என்பதனை ''திருமணச் சடங்குகளிலே அதிகரித்து வரும் மேலைத்தேயப் பண்பாடுகள்'' எனும் கட்டுரை மூலமாக அருள் ஒளி இதழில் அசிரியர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் கண்டித்துள்ளதனைக் காணலாம். (அருள் ஒளி, 2010)

மேலும் அவர் குறிப்பிடுகையில் சைவத் தமிழர்களின் பாரம்பரியப் பண்பாடுகளை தமிழர்கள் தான் பாதுகாக்க வேண்டும். பல நூற்றாண்டு காலமாக எமது மூதாதையர்கள் பாதுகாத்த உன்னத பண்பாடுகளை சமீப காலமாக நாம் தொலைத்த வரகின்றோம் எனவும் உதாரணமாக மணமகன், மணமகள் போன்றொரின் ஆடையலங்காரங்கள் அனைத்தும் இன்று எம் பண்பாட்டிற்கு மாறாக நாகரிகத்தின் பெயரால் சீரளிந்து வருகின்றது இந்துக்களாகிய நாம் இவ் விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும் (அருள் ஒளி, 2010) என குறிப்பிடுகின்றார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில்'' என்று நாம் இவ் விடயங்களில் அலட்சியமாக இருக்கக் கூடாது என்றுமில்லாதவாறு திருமண வைபவங்களில் பாரம்பரிய அணிகலன்கள் முதல் நீக்கப்பட்டு வேடிக்கையான உடைப் பண்பாடு மிளிர்வதைக் காணலாம் பாக்கிஸ்தான் ஆந்திரா பண்பாட்டுடைகளை மணமகன் அணிவதும் பெண்களின் ஆடைக் கலாச்சாரத்திலும் வேற்று நாகரிகங்களை அலங்கார ஒப்பனைகளாக வைப்பது இன்று வழமையாகி விட்டது. யாழ்ப்பாணத்துத் திருமண நடைமுறைகளிலெ இவற்றை அதிகம் காண முடிகின்றது. (குலரெத்தினம், 2017)

பண்பாட்டு உணவு மறைந்து மேலைத்தேய கலாச்சாரத்தில் புதிய சிற்றுண்டிகள் வழங்கும் மரபு ஏற்பட்டு வருகின்றது. திருமணச் சடங்குகளிலே கிரியைகளில் கடமையாற்றும் புரோகிகர்கள் கிரியைகளில் மிகுந்த அக்கறை காட்டுதல் வெண்டும். தற்காலத்தில் அவ்வாறான கிரியைகளில் கூட சில இடங்களில் வழமைக்கு மாறான விடயங்கள் புகுவதனைக் காணலாம். சில முக்கிய கிரியைகளை புரோகிதர்கள் விளக்கம் கொல்லி நிறைவேற்றுதல் வேண்டும் என அவரின் கருத்துக்கள் நீண்டு செல்கின்றது. (குலரெத்தினம், 2017)

**மத மாற்றத்திற்கு எதிரான கருத்துக்கள்**

இந்துப் பண்பாட்டினைப் பின்பற்றும் மக்கள் தற்காலத்திலே ஐரோப்பியர் காலத்தில் ஏற்பட்டதனைப் போன்று மத மாற்றுதல்களிற்கு உட்படுத்தப்படுகின்றனர். உதாரணமாக இந்தியா இலங்கையில் மட்டுமல்லாமல் புலம்பெயர்ந்து நம்மவர் வாழும் மேலை நாடுகளில் குறிப்பாக ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் வாழும் எம்மவரை தம்வசப்படுத்தி தமது மதப் பிரசாரிகளாகத் தாயகம் அனுப்பியுள்ளமை யாவரும் அறிந்ததே எனவே இது தொடர்பாக சைவ நிறுவன அமைப்புக்கள், இந்து சமயப் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் போன்றோர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதனை இவ் இதழ்கள் குறிப்பிடுகின்றன. உதாரணமாக அருள் ஒளி இதழின் ''இந்துக்களே விளிப்பாக இருங்கள்'' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில்.

''இந்துக்களே விழிப்பாக இருங்கள் மனிதன் தன்னைப்பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களைப் பற்றியும், என்று அறியவும், உணரவும் தொடங்கினானோ அன்றே அவன்பால் சமய உணர்வும் குடி கொண்டு விட்டது. தன்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும், தன்னையும் தன்னைச் சூழ உள்ள பொருள்களையும் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருள் செய்து வருகின்ற ஒரு பொருள் எதுவோ அதுவே இறைவன் என்றும் கடவுள் என்றும் கருதத் தொடங்கினான். காலப் போக்கினால் அப்பொருளுக்கும் தனக்கும் உள்ள இயல்பையும், அதனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றையும் ஆராயத் தலைப்பட்டடான் அவ்வுணர்வே சமய உணர்வாயிற்று.'' (சிவகுருநாதன், 2007)

''உலகில் பல்வேறு சமயங்கள் தோன்றி, ஒரு சில நின்று நிலைத்தன. ஆதியும் அந்தமும் இல்லாத தொன்மைச் சமயம் இந்து சமயம் என்பதனை கீழைத்தேய அறிஞர் மட்டுமல்ல மேலைத்தேய ஆய்வாளர்கள் பலரும் ஒப்புக்கொண்டனர். கிரேக்க உரோம நாகரீகங்களுக்கு முந்தியது இந்துநாகரிகம் என விஞ்ஞானிகளும் மெய்ஞானிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்து மதம் பற்றிய தனித்துவச் சிறப்பை பிறமதத்தில் தோன்றிய மேலைத்தேய அறிஞர்கள் மொனீர்வில்லியம்ஸ், அன்னிப் பெசன் அம்மையார், விக்டர்கசின், ஆனோல்ட் ரொயின்பி, மாக்ஸ்முல்லர், ஜோன்மார்ஷல், சேர் அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் போன்றவர்கள் மிகத்தொன்மை உயர் பண்பாடும் மிக்க சமயமாகப் போற்றி உலக அரங்கில் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்தனர்'' (குலரெத்தினம், 2017)

''அறிவுலகத்தாலும் ஆத்மீகவுலகத்தாலும் போற்றப்பட்ட இந்து மதத்தை சமீபகாலமாக சிலர், தமது சுய நலத்துக்காக சமயச் சடங்குகளையும் சமய வழிபாட்டு நெறிமுறைகளையும் கேலி செய்வது வேதனை தருகிறது. சமயம் பார்த்து சமயம் மாற்ற முனையும் சிலர் சில ஒலி நாடாக்களை வெளியிட்டும், தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் கேலி செய்து பேசி வருவதாகவும் அறிந்து கவலைப்படுகிறோம்'' (குலரெத்தினம், 2017)

''இந்தியாவில் நகைச்சுவை நாடகம் தயாரித்து எமது சமய முறைகளை நளினம் செய்துள்ளனர். எனவே இந்து மக்களே விழிப்பாக இருங்கள். எம்மதத்தை யார் அவமதித்தாலும் அதற்கு நிதானமான நேர்த்தியான பதில் சொல்லத் தயாராக இருங்கள். சம்பந்தர் சுவாமிகள், அப்பர் சுவாமிகள், ஆழ்வார்கள், சுவாமி விவேகானந்தர், மீராபாய், நாவலர் பெருமான் போன்றவர்கள் நிதானமாகச் சிந்தித்து எம்மதம் நோக்கி வந்த இடையூறுகளை எல்லாம் போக்கிக் காத்தனர்'' (தியாகராசா, 2007)

பிறமதத்தவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல இந்துக்கள். இந்து மதத்தவர்களை ஆசைகாட்டி ஏமாற்றி மதத்தின் மாண்பினை மாசுபடுத்துவதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்துக்களே பல்வேறு வடிவங்களாக எம் சமயத்தை ஆட்கொள்ள பலர் புறப்பட்டு இருக்கும் இவ்வேளை சற்று சிந்தித்து, எம் முந்தையர் காத்த மாண்பினை காக்க முனையுங்கள். இந்தியா இலங்கையில் மட்டுமல்ல புலம் பெயர்ந்து நம்மவர் வாழும் மேலை நாடுகளில் குறிப்பாக ஜேர்மனி சுவிஸ் நாட்டில் நம் ஈழத்தவர்களை தம் வசப்படுத்தி தம் மதப் பிரசாரகர்களாக தாயகம் அனுப்பியுள்ளமை யாவரும் அறிந்ததே'' பெற்ற தாயை மறப்பது போன்ற பாவமே பிறந்த மதத்தை மாசுபடுத்துவது. எனவே நாம் விழிப்பாக இருப்போமாக என மத மாற்றத்திற்கு எதிரான கருத்துக்கள் காத்திரமாக எடுத்துக் கூறுகின்றது.

தற்காலத்தில் கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்தவர்கள் இந்துக்களின் வீடுகளிற்குச் சென்று மதமாற்றம் செய்யும் செயல்களில் ஈடுபடுவதனையும் அவற்றைக் கண்டித்து ''வீட்டிற்கு வந்த மத போதகர்'' எனும் தலைப்பில் இந்து சாதனம் 15.01.2011 அன்று வெளியான பத்திரிகையில் கட்டுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டது அக் கட்டுரையில் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புவதற்கு அவர்கள் கையாளும் உத்திகள் போன்றவை தெளிவாக எடுத்துக் கூறப்படுகின்றது. (தியாகராசா, 2007)

அவர்கள் வந்தவுடன் ''உங்களிற்கு ஏதேனும் பிரச்சினை உள்ளதா இருந்தால் எம்மிடம் மனம் விட்டுக் கூறுங்கள் எங்களால் உங்களது துன்பங்களையும் கவலைகளையும் போக்க முடியாது என்றாலும் எம் தேவனால் கண்டிப்பாக அமைதியைக் கொடுக்க இயலும்'' என்கின்ற அவர்களின் மன நெகிழ்வான பேச்சுத்திறனை ஓர் உத்தியாக கூறியுள்ளதனைக் காணலாம். எனவே இவ்வாறான கட்டுரைகளை தொடர்ந்து பிரசுரித்து வருவதன் காரணமாக இந்து மதத்தின் மீதான அதீத பற்று மக்களிடையே ஏற்படுவதற்கும் தன்னிலையில் நின்று நிலக்கவும் ஏதுவாக அமைகின்றது.

**அச்சு ஊடகங்களில் இந்துப் பெண்கள்**

ஆறுமுக நாவலரின் வருகையின் காரணமாக 19,20 ஆம் நூற்றாண்டுகளில் சமய வாழ்வியலுடன் கல்வியறிவு ஆழுமை தொழில் மேலாண்மை பண்பாட்டுப்புலம் என்பன விருத்தியடைந்தது. இவற்றிலே உலகளாவிய நிலையில் செல்வாக்குப் பெற்ற சீமாட் லீலாவதி இராமநாதன், மங்கம்மாள், இரத்தினம்மா நவரத்தினம், பத்மாசினி இராசேந்திரம், தம்பு வேதநாயகி, தங்கம்மா அப்பாக்குட்டி, மங்கையற்கரசி சிற்றம்பலம் போன்றோர் சிறந்து விளங்கினர்.

(01) தங்கம்மா அப்பாக்குட்டி

ஈழத்திருநாட்டில் நாவலர்பெருமான் வழியில் சைவசமயத்துக்கும், தமிழ்மொழிக்கும், சமூகத்துக்கும் உழைத்த பெருந்தகை பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் என்றால் மிகையாகாது. 1925 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் நாள் மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த அம்மையார் தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்போடு பணியாற்றி 2008 யூன் மாதம் விசாக நட்சத்திரத்தில் இறையடிக்குச் சென்றார். சொல்லாலும், செயலாலும் ஒன்றாய் வாழ்ந்த அம்மையாரின் வாழ்க்கை சைவ உலகம் உள்ளவரை நீள நினைந்து போற்ற வேண்டிய கடப்பாடு அனைவர்க்குமுண்டு. அந்த வகையிலே அருள் ஒளி மார்கழி மாத மலரில் இவரின் பணிகளும் பெருமையும் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகின்றது. (தங்கம்மா அப்பாக்குட்டி, 2004)

''தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இன்றைய வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு என்பது எல்லையற்றது. நிறைந்த ஆன்மீக இலக்கியப்புலமை மிக்க அம்மையாரின் பேச்சுவன்மை ஆயிரம் ஆயிரம் மக்களைக் கவர்ந்தது. கணீரென்ற குரலில் திருமுறைகளைப் பாடி உரையாற்றும் ஆற்றல் அவரின் தனித்துவம் எனலாம். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தன் சொல் வன்மையால் எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் இவர். மலேசியா நாட்டில் ஒரு திருக்கோவிலில் பெண்கள் தலைவிரி கோலமாக வழிபாடு செய்ய வந்தமை கண்டு தனது உரை மூலம் அவர்களை நிதானப்படுத்தியதாக இன்றும் அங்குள்ள மூத்தோர் சொல்லிப் பெருமைப்படுவார்கள்.'' (தங்கம்மா அப்பாக்குட்டி, 2004)

''அமைதியாக பற்று நீங்கி வாழ்ந்த அம்மையார் சாதித்த சாதனைகள் என்றும் மறக்கமுடியாதவை. அன்னார் வாழும் போதே அவரது பிறந்தநாளை அறக்கொடை விழாவாக சமூகம் கொண்டாடியது. அவரது பூதவுடல் நீங்கிய பின்பும் அவர் மண்ணில் உதித்தநாள் மகிமையாகக் கொண்டாடப்படுவது பெருமைக்குரியது.'' என்றவாறு ''அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் அகவை தொண்ணூறு பூர்த்தி நாள்'' எனும் ஆசிரியர் தலைப்பில் அமைந்த கட்டுரையில் அன்னாரின் பணிகள் எடுத்துரைக்கப்படுகின்றது. (தங்கம்மா அப்பாக்குட்டி, 2004)

(02) இரத்தினாமா நவரத்தினம்

இந்து சாதனப் பத்திரிகையானது இரத்தினாமா நவரத்தினம் அம்மையாரின் மேதகு மாண்பினை எழுதும் போது ''சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதில் தன்னிகரற்ற ஞானச்சுடராக விளங்கி தனது ஆங்கில ஆற்றலைப் பயன்படுத்தி சைவ சித்தாந்தத்தையும் சைவத் தமிழ் இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் கருத்துக்களை உலகெங்கும் பரப்பியவரும், பங்காற்றியவரும் தலைசிறந்த தமிழ் இலக்கியப்

பேச்சாளராக வித்தியாதரிசியாகவும் விளங்கிய ஈழத்து சைவ மங்கையர்குல திலகம் திருமதி இரத்தினாமா நவரத்தினம் அம்மையார்'' என அவரின் பன்முக ஆற்றல்களை விவரிப்பதனைக் காணலாம். (திருமுருகன், 2014)

(03) மங்கம்மாள்

மங்கம்மாள் என்பவர் 1923 ஆம் ஆண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுத்த ''தமிழ்மகள்'' எனும் பத்திரிகை ஸ்தாபனம் ஒன்றினையும் நிறுவினார். யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட இப் பத்திரிகை இவர் சிலகாலம் இந்தியாவில் தங்கியிருந்த போது அற்கும் வெளியிடப்பட்டதனைக் காணலாம். இப் பத்திரிகையிலே நாமார்க்கும் குயல்லோம்'' (திமுருகன், 2014) திருமுருகன் எனும் இலட்சிய வாசகம் ஒன்று குறிக்கப்பட்டு பெண்கள் எவர்க்கும் கட்டுப்பட்டவர்களோ அமைகளோ இல்லை என அவ் வாசகம் வலியுறுத்துவதனைக் காணலாம்.

பெண் விடுதலை, சமத்துவம், சீதனக் கொடுமை, போன்ற பெண்கள் தொடர்பான விடயங்களையும் கட்டுரைகளையும் தாங்கி இப் பத்திரிகை வெளிவந்துள்ளது. மங்கம்மாள் தனது பத்திரிகை மட்டுமன்றி தேசபக்தன், இந்துசாதனம், ஈழகேசரி போன்ற பத்திரிகைகளிலும் பெண்கல்வி பெண்களின் முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் என்பவற்றை உள்ளடக்கி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

(04) ஆண், பெண் சமத்துவம்

இந்துசாதனமானது ஆண், பெண் சமத்துவம் பற்றியும் பெண்கள் சமூகத்தின் முன்வந்து அறம் வளர்க்க வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தததுவதனைக் காணலாம். ''மனித வர்க்கத்தின் விதி வனிதையரிடத்தே'' என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங்கமொன்றில் ஆண் தகைமையோர்களும் அவர்க்கு நிகரன்றே என்று கந்தபுராணச் செய்யுள் அடியொன்று எடுத்துக் காட்டப்பட்டு அறம் வளர்க்க வல்ல சக்தி ஆண்களை விடவும் பெண்களிடத்திலேயே அதிகம் உண்டு எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (திருமுருகன், 2014)

இதுமட்டுமன்றிச் ''சமயப் பணியாற்றிய சைவமங்கையர்'' என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரை பின்வருமாறு விரிந்து செல்கிறது.

''உமையொருபாகன் என்ற பொழுதே சைவ உலகில் பெண்ணும் ஆணும் சமத்துவ உரிமை பூண்டுள்ளோ என்பது அமையும். முற்காலத்தில் சைவமங்கையர் எவ்வளவுபேர் இல்லறத்தில் இருந்துகொண்டே சமயப்பணி செய்திருக்கிறார்கள் என்பதனை நமது பெரியபுராணம் நன்றாகக் காட்டுகிறது'' (தியாகராசா, 2007)

1938 ல் வெளிவந்த ஈழகேசரி ஆண்டு மலரில் ''பெண்மகள் விலங்கு'' என்கின்ற தலைப்பில் தம்பு வேதநாயகி என்பவரின் கட்டுரை ஒன்று இடம்பெற்றது. இக்கட்டுரையிலே அவர் பெண்களுக்கான சம உரிமையானது சமுதாயத்தில் மறுக்கப்படுவதனையும் பெண்களிற்கான சரிபாதி உரிமையினை வலியுறுத்தியுள்ளமையினையும் காணலாம்.

(05) பெண்களின் மேற்கத்தைய மோகத்திற்கு எதிரான கண்டனம்

இராமச்சந்திரன் என்பவரால் எழுதப்பட்ட ''பத்தினி விரதம்'' அல்லது ''பதிவிரதாதர்மம்'' என்ற தலைப்பிலமைந்த இந்துசாதனக் கட்டுரையானது ''தலை திமிர்ந்து நிற்பதும் எக்கஷ்டத்திலும் அயலாரை வருத்தாது தன் தவச்செல்வர்கள் மூலம் உலகுக்கு உய்ய வழியைக் காட்டி நிற்பதும் எங்கள் புராதன இந்து நாகரிகம் ஒன்றேயாம்... தமது பூர்வ புண்ணியம் தூண்ட இந்தியா வந்தடைத்த அன்னிபெசன்ற் தேவியாரின் வாழ்க்கையை நோக்குங்கள்.... செல்வி மாக்கிறற் நோபிள் தூய அன்னை சாரதாதேவியாரைச் சந்தித்தவுடன் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் இந்தியாவில் ரிஷிபத்தினிகள்

வாழ்ந்ததும் ஞானோபதேசம் செய்ததும் வெறுங் கட்டுக்கதைகளல்ல, முழுதும் உண்மையே என்றுணர்ந்து சகோதரி நிவேதிதாவாக மாறிவிட்டனர்'' என தொடர்கின்றது. (தியாகராசா, 2007)

இந்துப் பண்பாட்டின் விழுமியச் சிறப்பை உணர்ந்து அதன் வழி ஒழுகிய ஐரோப்பியர் பெண் மணிகளின் வரலாறுனளைச் சுட்டிக் காட்டுவதன் ஊடாக மேலைத்தேய நாகரிக மோகத்தினால் இந்துப் பண்பாட்டை புறக்கணித்து வாழ முயலும் இந்துப் பெண்களை சிந்திக்க வைக்கும் பிரயத்தனமாகவே இக் கட்டுரை அமைந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

பெண் என்கின்ற எனண்ணக்கரு உயிரியல் நிலை சார்ந்த எண்ணக்கரு மட்டுமன்றி சமூகக் கட்டமைப்பிற்கும் உட்பட்டு நிற்கின்றது. இவற்றுடன் இணைந்து மேலெழும் பெண்கல்வி சமூக அடித்தளத்தை அடியொற்றிய மேலமைந்த செயற்பாடாகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாண இந்து சமுதாய வளர்ச்சியில் பெண் கல்வியாளர்களும் சமூக சீர்திருத்தவாதிகளும் தோற்றம்பெற்றுத் தமது புலமை நுட்பத்தினால் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர்.

**பரிந்துரைகளும் நிறைவுரையும்**

யாழ்ப்பாணத்தினை அடித்தளமாகக் கொண்டு காலத்திற்கு காலம் பல்வேறு வகையான அச்சு ஊடகங்கள் தோற்றம் பெற்றிருந்தாலும் அவற்றில் பெரும்பாலானவை இன்று அரசியல், பொருளாதாரம், வணிகம் போன்ற செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை காணமுடியும். எனினும் சமயப் பத்திரிகைகள் எனும் வகையில் இந்து சாதனம் போன்ற பத்திரிகைகள் இன்றும் நின்று நிலைத்திருப்பதோடு அவை இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியில் தமது பங்களிப்பினை வழங்கி வருவதனையும் காணலாம்.

இன்றைய காலகட்டத்தினை பொறுத்தவரையிலே அச்சுப்பதிப்புத் துறையானது பாரிய வளர்ச்சி கண்டு நவீன அச்சு கருவிகளின் தோற்றம் போன்றன காணப்படினும் பெரிதும் செய்தி பத்திரிகைகளாகவே வெளிவருவதனைக் காணமுடியும். உதாரணமாக அரசியல், பொருளாதாரம், வணிகம் போன்ற செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை காணலாம். குறிப்பாக இலாப நோக்கம் கருதியே அனேக பத்திரிகை நிறுவனங்கள் இன்று இயங்கி வருகின்றன அதில் தவறில்லை எனினும் சமயம் பற்றிச் சிந்திக்க வேணடியதும் அவசியமானதே.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முன்னணிப் பத்திரிகைகளாக அடையாளம் காணப்படுகின்ற ஈழுநாடு, உதயன், வலம்புரி போன்ற பத்திரிகைகள் சமயக் கருத்துக்களை ஆங்காங்கே தாங்கி வெளிவந்தாலும் பிதானமாக வணிக நோக்கத்தினையும் தமது வளர்ச்சிக்காக எவ்வாறான செய்திகளை வெளியிடலாம் எனும் எண்ணப்பாடுகளையும் கொண்டவையாகவே ஆராய்ந்த முடிவுகளின் அடிப்படையில் கூற முடியும்.

பெரும்பாலும் கொடுக்கப்படுகின்ற தகவல்களை அவ்வாறு பிரசுரிப்பதோடு மட்டும் செய்திப் பத்திரிகைகள் நின்றுவிடுகின்றன. சமய விளம்பரங்கள் போன்றவற்றிற்கு குறைந்த கட்டணங்கள் அறவிடப்படுவதோடு இலங்கையிலுள்ள அனைத்து மதத்தவரின் ஆதரவினையும் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு அவை செயற்பட்டு வருகின்றமையை காணமுடியும்.

இந்து சாதனம் பத்திரிகையானது பல்வேறு கருத்துக்களைத் தாங்கி தற்போது வெளிவந்தாலும் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளுடன் ஒப்பிடுகிறபோது சற்று வளர்ச்சியில் குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றது. சிறந்த ஆக்கங்களை வழங்காமை, அச்சுப் பதிப்பிற்கான போதிய நிதி கிடைக்காமை, இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே ஆர்வமின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் இவ்வாறான தன்மை காணப்படுவதனை அவதானிக்க முகின்றது. ஐரோப்பியர் காலத்தோடு ஒப்பிடுகின்ற போது தற்காலத்தில் அச்சு ஊடகங்கள் இளைஞர்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனவா என்று கேட்டால் அது கணிசமான அளவினதாகவே காணப்படுகின்றது. கலாநிதி ஆறு திருமுருகன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் போன்றோரின் கட்டுரைகள் கருத்துக்கள் இன்றைய அச்சு ஊடகங்களில் பிரதான இடம் வகிப்பதனை அவதானிக்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் நவீன மோகங்களினால் சீரழியும் இந்துப் பண்பாட்டினை இளைஞர்கள் மத்தியில் பதிய வைக்கும் சாதனங்களாக இந்த ஊடகங்கள் விளங்குகின்றன. இந்த வகையில் இருபத்தோராம் நூற்றாண்டில் அச்சு ஊடகங்கள் பாரம்பரியமான யாழ்ப்பாண இந்துப் பண்பாட்டுப் புலங்களின் ஒவ்வொரு கூறிலும் மறைமுகமாகவோ நேரடியாகவோ சாதகமான தாக்கத்தினை செலுத்து வருகின்றன.

**உசாத்துணை நூல்கள்**


சத்தியசீலன்,மா. (2007). இருபதாம் நூற்றாண்டு கால இலங்கையில் இந்து மதத்தின் வளர்ச்சிப் போக்குகள். அகில இலங்கை இந்துமாமன்றம்.

சபாரத்தினம், த. (2009). பத்திரிகையியல் வழிகாட்டி. சிரேசன்ட் பதிப்பகம். சென்னை.

சுந்தரம் பிள்ளை, ந. (2009) ஊடகவியல். கங்கை அச்சகம் யாழ்ப்பாணம்.

சிவகுருநாதன், இ. (2001) இலங்கையில் தமிழ்ப் பதினப் பத்திரிகையின் வளர்ச்சி. கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

சிவனேசச் செல்வன், ஆ. (2010). ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு. டிசைன் லைப் அச்சகம் கொழும்பு.

சிவகுருநாதன், இ. (2007). இந்து சமய வளர்ச்சியில் பத்திரிகைகள். அகில இலங்கை இந்துமாமன்றம்.

சூசை மாணிக்கம். (2006). ஊடகங்களும் நற்செய்திப் பணியும். மறை அருவி வெளியீட்டகம் கொழும்பு.

தமிழ்வாணன்,லே. உலகப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும். மணிமேகலைப் பிரசுரம். சென்னை.

தியாகராசா, ஆ. (2007). இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய வளர்ச்சியில் இந்நாட்டவரின் பங்களிப்பு. அகில இலங்கை இந்துமாமன்றம்.

மணி, பொ.சு. (2015). இலங்கையில் சுவாமி விவேகானந்தர். அகில இலங்கை இந்துமாமன்றம்.

முகுந்தன், ச. (2007) பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத் துறையின் வகிபங்கு. அகில இலங்கை இந்துமாமன்றம்.

ஜெயப்பிரகாஷ், ச. (2015). இந்து சமய நிகழ்ச்சிகளில் ஈழத்து ஊடகத்தின் வகிபங்கு. அகில இலங்கை இந்துமாமன்றம்.

யோகராசா, செ. (2007). ஈழத்து இலக்கியமும் இதழியலும். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

ரூபன், மா. (2002). பத்திரிகை இயல் அடிப்படைகள். புனிதவளன் கத்தோலிக்க அச்சகம். யாழ்ப்பாணம்.

தங்கம்மா அப்பாக்குட்டி. (2004). அருள் ஒளி: ‘‘ஆறுமுக நாவலர்’’ கட்டுரை, காரத்திகை மாத மலர். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை. இலங்கை.